மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மார்டின் அவர்கள் சொல்ல வேண்டிய விஷயங்களைப்பற்றியெல்லாம் லாபியிலே சொல்லியிருக்க வேண்டுமேயொழிய இங்கே வந்து இவ்வாறு இடத்தில் இருந்துகொண்டே பேசுவது சரியல்ல.

தன்னிலை விளக்கம் கொடுக்கவேண்டுமென்றால் என்னுடைய அனுமதி பெற்றுத்தான் கொடுக்க முடியும். நீங்கள் என்ன எழுதி வைத்திருக்கிறீர்கள் என்பதைப் பார்த்து நான் என்னுடைய தீர்ப்பை அறையிலே கொடுக்கிறேன். இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

(5) அறிக்கைகள் அளித்தல்.

(அ) 'பாசனம்' பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை

திரு. ஏ. வி. பி. ஆசைதம்பி: பேரவைத் தலைவர் அவர்களே, 'பாசனம்' பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் பதினேழாவது அறிக்கையை இப் பேரவைமுன் வைக்கிறேன்.

(ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் 1969–70-ம் ஆண்டுக்கான ஐந்தாம், ஆறும் அறிக்கைகள்.

திரு. கி. ஜயராமன்: தலைவர் அவர்களே, சட்ட விதிகள் ஆய்வுக் குழுத் தலைவர் சார்பாக 1969–70-ம் ஆண்டுக்கான மேற்படி குழுவின் ஐந்தாம் அறிக்கை, ஆறும் அறிக்கை ஆகியவைகளை அவைமுன் வைக்கிறேன்.

(இ) திரு. டி. மார்டின்மீது எழுப்பப்பட்ட உரிமை மீறல் வழக்கு, திரு. எ. பாலசுப்ரமணியன் மற்றும் சில உறுப்பினர்கள் ஆளுநர் உரையின் போது வெளிநடப்பு செய்ததைக்குறித்த வழக்கு ஆகியவைபற்றிய அவையுரிமைக் குழுவின் அறிக்கைகள்.

திரு. ஜி. ஆர். எட்மண்ட்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மார்டின் மீது எழுப்பப்பட்ட உரிமை மீறல் வழக்கு, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. பாலசுப்ரமணியன் அவர்களும் மற்றும் சில பேரவை உறுப்பினர்களும் 1969-ம் ஆண்டு ஜனவரி மாதம் 25-ம் நாள் ஆளுநர் உரை அன்று வெளிநடப்பு செய்ததைக் குறித்த வழக்கு ஆகியவைபற்றிய அவையுரிமைக் குழுவின் அறிக்கைகளை அவை முன் வைக்கிறேன்.

திரு. வ. ஜார்ஜ்: தலைவர் அவர்களே, நான் ஒரு அமென்ட்மென்ட் கொடுக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறிக்கையைத்தான் கொடுத்திருக்கிறார்கள். கன்சிடரேஷனுக்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென்று 'மூவ்' பண்ணவில்லை. கன்சிடரேஷனுக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று மோஷன் வந்த பிறகுதான் அமென்ட்மென்ட் கொடுக்க முடியும். விதி 191-ல்

'(*a*) The report of the Committee of Privileges shall be presented to the Assembly by the Chairman of the Committee or by any member of the Committee so authorised.

(*b*) As soon as may be, after the report has been presented, a motion in the name of the Chairman of the Committee or any member of the Committee may be made that the report be taken into consideration.